# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.15 (LW 25 )

| **பெயர்** | லதா | **தொழில்** | |
|---|---|---|---|
| **கணவர் பெயர்** | சீராளன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **13.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரம்பலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.11.2020ஆம் தேதியில் நிலக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது குரும்பபட்டியை சேர்ந்த சென்றாயன் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவை பெற்று மனு ரசீது எண் 240/2020 என்று பதிவு செய்தேன். புகார் சம்பந்தமாக விசாரிக்கும் போது அய்யனார் என்பவருடன் தொடர்பு வைத்துக்கொண்டு பிரச்சனை செய்து வருவதாக சொன்னார். அதன் பின்னர் அய்யனார் ஆசிரியரை கூப்பிட்டு விசாரித்து குடும்பத்தை கெடுக்கக் கூடாது என்று சொல்லி இருவருக்கு ஆலோசனை வழங்கினேன். அந்த அய்யனார் ஆசிரியர் தான் நீதிமன்றத்தில் ஆ ஜராகியுள்ள 1ஆம் எதிரி. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1ஆம் எதிரி **தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சென்றாயன் கொடுத்த புகார் மனு மற்றும் அதற்காக நான் கொடுத்த மனு ரசீது ஆகியவை அந்த காவல் நிலையத்தில் உள்ளன. அவற்றை இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்த போது வாங்கிக்கொண்டார். அய்யனார் என்பவரிடம் எழுத்துமூலமாக வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை என்றால் வாங்கியுள்ளேன். அய்யனாருக்கும் வனிதாவிற்கும் உள்ள தொடர்பு பற்றி எழுதி வாங்கவில்லை. வணிதாவும் அவரது தாய் மாமன் முருகனும் சேர்ந்து சொத்து சம்பந்தமாக சென்றாயனிடம் பிரச்சனை செய்வதாக தான் அவர் புகார் கொடுத்தார் என்றால்

சரிதான். அது விசயமாக தான் எழுதி வாங்கினேன். அவ்வாறு எழுதி வாங்கிய வாக்குமூலங்களை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேன். புகார் மனு, சி.எஸ்,ஆர் ரசீது, எழுதி வாங்கிய வாக்குமூலங்கள் ஆகியவற்றை ஆய்வாளரிடம் கொடுத்தேன். சி.எஸ்,ஆர் மனுவை மேல் நடவடிக்கை முடித்து வைக்கப்பட்டதாக குறிப்பிட்டு மனு முடிக்கப்பட்டது. சி.எஸ்,ஆர் Status விபரம் CCTNS வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். நான் விடுப்பில் இருந்த போது வாணி என்ற சார்பு ஆய்வாளர் பொறுப்பில் இருந்தார். மேற்படி சார்பு ஆய்வாளர் வாணி மனு சம்பந்தமாக விசாரணை செய்த விபரம் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் புகார் சம்பந்தமாக விசாரணை எதுவும் செய்யவில்லை என்றும், புகார் காவல் ஆய்வாளர் வாணி என்பவர் விசாரித்து நடவடிக்கை எடுக்காமல் விடப்பட்டது (Action Dropped) என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் தெரியாது. இந்த விபரம் எனக்கு தெரியும் என்றும், சார்பு ஆய்வாளர் வாணியை விசாரித்தால் உண்மை விபரம் தெரிந்து விடும் என்றும் அதனால் அவரை விசாரிக்காமல் என்னை சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. அய்யனாரை விசாரித்து அவரிடம் குடும்பத்தை கெடுக்ககூடாது என்று சொல்லி ஆலோசனை வழங்கிய விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் சொல்வது போல் அய்யனாரை கூப்பிட்டு விசாரிக்கவில்லை என்றும், எதிரிகளுக்கு ஆலோசனை வழங்கவில்லை என்றும் சொல்வது சரியல்ல. சென்றாயன் கொடுத்த புகாருக்கும் 1ஆம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:20:51 +0530

Additional District Judge,

Dindigul.